දුරකථන / தொலைபேசி / Telephone ) 0112669192 , 0112675011 ) 0112698507 , 0112694033 ) 0112675449 , 0112675280

ෆැක්ස් / பெக்ஸ் / Fax ) 0112693866 ) 0112693869 )0112692913

විද්‍යුත් තැපෑල, / மின்னஞ்சல் முகவரி / e-mail )postmaster@health.gov.lk

වෙබ් අඩවිය / இணையத்தளம் / website ) www.health.gov.lk

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය / எனது இல / My No. )FHB/GWH/2018/08

ඔබේ අංකය / உமது இல / Your No. : )

දිනය / திகதி / Date )2018/03/16

# සෞඛ්‍ය, පෝෂණ සහ දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
# சுகாதார,போசணைமற்றும் சுதேசவைத்தியஅமைச்சு
# Ministry of Health, Nutrition& Indigenous Medicine

சகல மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்
சகல பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்

## ‘புதிதாக மணமுடித்தவர்களுக்கான சேவை பக்கேஜ்’ வழங்கல் தொடர்பான வழிகாட்டிகள்

மேலே குறிப்பிட்டுள்ள திட்டத்தைச் செயற்படுத்துவது தொடர்பாக சகல மாவட்டங்களிலும் உள்ள மக்கள் சுகாதார அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளமை பற்றி தாங்களும் அறிவீர்கள். இவ்வடிப்படையில் புதிதாக திருமணம் முடிக்கும் தம்பதிகளுக்கு உங்கள் பகுதியில் உள்ள சுகாதார மருத்துவ அதிகாரிகள் மூலம் மேற்படி பக்கேஜ் வழங்கப்பட்டு வருகின்றன என நாம் நம்புகின்றோம்.

மேற்படி பக்கேஜின் தரத்தை மேம்படுத்தவும், இத்திட்டத்தினை பலமூட்டவும் அது தொடர்பான வழிகாட்டல்கள் இருப்பது மிக அவசியமாகும். எனவே, பக்கேஜை வழங்குவது தொடர்பான வழிகாட்டல்கள் குடும்ப சுகாதார பணிமனை மூலம் உருவாக்கப்பட்டுள்ளதுடன் அது இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

‘புதிதாக மணமுடித்தவர்களுக்கான சேவை பக்கேஜ்’ ஊடாக புது மணத்தம்பதிகளுக்கு சேவைகளை வழங்கும் போது இந்த வழிகாட்டல்களை கடைப்பிடிக்குமாறு உங்கள் பிரதேசத்தில் இருக்கும் சுகாதார மருத்துவ அதிகாரிகள் அனைவருக்கும் தயவு செய்து வலியுறுத்தவும். மக்கள் சுகாதாரப் பணியாளர்கள் வழங்கி வரும், கருவுறுவதற்கு முன்பான கண்காணிப்பை மேம்படுத்தி அச்சேவையை மேலும் பலமூட்டுவதே இதன் குறிக்கோள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

டாக்டர் அனில் ஜாசிங்ஹ
சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம்

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health, Nutrition & Indigenous Medicine,
"Suwasiripaya"
385, Rev Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

பிரதிகள்:

செயலாளர், சுகாதார, போஷனை மற்றும் பாரம்பரிய மருத்துவ அமைச்சு
பிரதி பணிப்பாளர் நாயகம், மக்கள் சுகாதார சேவைகள் II
பணிப்பாளர், தாய் மற்றும் சேய் ஆரோக்கியம்
பணிப்பாளர், தேசிய சுகாதார சேவைகள் நிறுவனம்
தலைமை மருத்துவ அதிகாரி, கொழும்பு மாநகர சபை
மாகாண சமூக மருத்துவ ஆலோசகர்கள்
மருத்துவ அதிகாரிகள், தாய் மற்றும் சேய் ஆரேக்கியம்
சுகாதார மருத்துவ அதிகாரிகள்

பொதுவான சுற்றறிக்கைக் கடிதம் எண்: 02-68/2018

**‘புதிதாக மணம் முடித்தவர்களுக்கான சேவை பக்கேஜை’ வழங்குவது தொடர்பான வழிகாட்டல்கள்**

தாய் மற்றும் சேய்க்கு வழங்கப்படும் சேவைகள் அடிப்படையில் இலங்கை ஒரு முன்மாதிரி நாடாக உலகில் கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் இச்சேவை மிக சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ‘தாய் சேய் திட்டம்’(MCH) ஊடாக வழங்கப்படுகின்றது. பிள்ளைப்பேறு சமயத்தில் தாய்மார்கள் மற்றும் சிசுக்கள் நீண்ட காலம் உயிர் வாழ்வதை உறுதி செய்யும் இலக்குடன் மேற்கொள்ளப்படும், சான்று அடிப்படையிலான வேலைத்திட்டங்களை உட்படுத்தி வடிவமைக்கப்பட்ட சில பக்கேஜ்கள் இத்திட்டத்தில் உள்ளன.

நிறுவன ரீதியான சேவைகள் மற்றும் கள சுகாதார சேவைகள் இடையே பலமான தொடர்பை ஏற்படுத்த துணைபுரிந்துள்ள இத்திட்டமானது, கடந்த பல தசாப்தங்களாக கற்பம் தரித்தல், மகப்பேறு, சிசுப் பருவம், குழந்தைப் பருவம் மற்றும் வளர் இளம் பருவம்/ கட்டிளமைப் பருவம் ஆகிய கட்டங்களில் பல்வேறுபட்ட சேவைகளை வழங்கி வருகின்றது. இதன் வெளிப்பாடாக பிள்ளைப்பேறின் போது ஏற்படும் உயிரிழப்புக்கள் பெருமளவில் குறைந்துள்ளதுடன் இது தொடர்பான நம் நாட்டின் சுட்டிகள் அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகளுக்கு ஒப்பாக மாறியுள்ளது.

இருப்பினும், இத்திட்டத்தின் வளர்ச்சி அன்மைக் காலம் முதல் சிறு பின்னடைவை கண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. இந்நிலையானது தாய் சேய் இறப்பு வீதம் தொடர்பான துல்லியமானதொரு பகுப்பாய்வின் தேவையை உருவாக்கியது. இதன் போது, இருதய மற்றும் சுவாசித்தல் தொடர்பான நோய்கள் மற்றும் ஏனைய சுகாதார சிக்கல்கள் போன்ற நேரடியல்லாத அவசர நிலைகள் தாய்மார்களின் மரணத்திற்குக் காரணமாகியுள்ளமை புலனாகியது. அத்துடன், போஷாக்கின்மை, வதிவிட வன்முறை போன்ற இது வரை நேரடியான காரணங்களால் மறைக்கப்பட்டிருந்த சில காரணிகளில் கவனம் செலுத்தப்பட வேண்டிய முக்கிய விடயங்களாக மாறி வருகின்றன. இவை ஒரு பெண் கருத்தரிப்பதற்கு முன்பேயே கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் ஆகும் என்ற உண்மை ஆய்வுகள் மூலம் ஊர்ஜிதமாகியுள்ளது.

இது போன்ற நிலைகளை கற்பம் தரிப்பதற்கு முன்பே கண்டு பிடிப்பதன் மூலம் கற்ப காலத்தில் மட்டுமன்றி அதன் பிறகு ஏற்படக் கூடிய பிரச்சினைகளை தவிர்க்கலாம். மேலும் இது மகப்பேறு மற்றும் சிசுக்களுக்கு ஏற்படும் பாரதூரமான நிலைகளை கட்டுப்படுத்தவும் துணைபுரியும்.

கற்பம் தரிப்பது முதல் பிள்ளைகள் வளரும் வயது வரையான கால கட்டங்களில் பல சேவைகளை MCH திட்டம் வழங்கினாலும் முதல் தடவையாக கற்பம்

தரிப்பதற்கு முன்புள்ள காலம் தொடர்பான சில குறைபாடுகள் இருக்கவே செய்கின்றன. மேலே குறிப்பிட்ட விடயங்கள் அடிப்படையில்

இக்காலகட்டத்திற்காகவும் சேவைகளை விரிவாக்குவதற்கான தேவை உணரப்பட்டு ‘புதிதாக மணம் முடித்தவர்களுக்கான சேவை பக்கேஜ்’ என்ற திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஒரு சிறந்த மற்றும் மகிழ்ச்சிகரமான திருமண வாழ்விற்குத் தேவையான பலமான அத்திவாரத்தை இடுவதை நோக்கமாகக் கொண்டுள்ள இத்திட்டமானது, வெற்றிகரமான திருமண வாழ்வையும், கிடைக்கக் கூடிய குழந்தைகள் உட்பட முழுக் குடும்பத்தினதும் ஆரோக்கியத்தையும் உறுதிப்படுத்தும் என்பதை ஊர்ஜிதம் செய்கின்றது.

'புதிதாக மணம் முடித்தவர்களுக்கான சேவை பக்கேஜின்' குறிக்கோள்களாவன:

- மகப்பேறு தொடர்பான ஆரோக்கியமான பழக்கவழக்கங்கள் பற்றிய அறிவை தம்பதிகளிடையே மேம்படுத்துவதுடன் மது அருந்துதல், புகை பிடித்தல், பெண்களுக்கு எதிரான வன்முறை போன்றவற்றின் தீமையை உணர்த்தி அவற்றை போக்குவது.
- பெண்கள் கருத்தரிப்பதற்கு முன்பே அவர்களுடைய ஆரோக்கியத்தை இயன்றளவு மேம்படுத்துவது.
- கணவன் மனைவி அல்லது ஜோடிகள், பெற்றோராக ஆவதற்கு முன்பே உடல் நலம் தொடர்பான பிரச்சினைகளை கண்டறிந்து அவற்றை சீர் செய்வது.
- கற்ப காலம் மற்றும் பிள்ளை பேறு காலத்தில் ஏற்படும் சிக்கல்களை குறைத்து தாய் சேய் இறப்புக்களை கட்டுப்படுத்துவது. இதன் நோக்கம் கருவுறுவதற்கு முன்பே ஏற்படக் கூடிய சிக்கல்கள் காரணமாக நிகழும், தவிர்க்கக்கூடிய தாய் சேய் மரணங்களை குறைத்தலாகும்.

சுகாதார மருத்துவ அதிகாரி (MOH), பொது சுகாதார தாதி (PHNS), பொது சுகாதார பரிசோதகர் (PHI) மற்றும் பொது சுகாதார மருத்துவ மாது (PHM) ஆகியோர் உட்பட்ட சுகாதாரக் குழுவின் மருத்துவ அதிகாரி ஊடாக புதிதாக திருமணமான தம்பதிகளுக்கு இச்சேவை பக்கேஜ் வழங்கப்படுதல் வேண்டும்.

**'புதிதாக மணம் முடித்தவர்களுக்கான சேவை பக்கேஜ்' வழங்கும் விதங்கள் அம்சங்கள்**

'புதிதாக மணம் முடித்தவர்களுக்கான சேவை பக்கேஜின்' சேவைகள் கீழ் காணும் 5 முறைகள் ஊடாக வழங்கப்படும்:

1. அழைப்பிதழ்
2. புதுவாழ்விற்கான ஆரோக்கியப் பரிசோதனைப் பதிவேடு / கருவுறுவதற்கு முன்பே அவதானிக்கும் கருவி
3. BMI கணிப்பான்
4. 'மகிழ்ச்சியின் இல்லத்திற்கு எமது நல்வாழ்த்துக்கள்' கைநூல்.
5. புதிதாக மணமுடித்தவர்களுக்கு சேவை வழங்கும் விதத்தை தெளிவுபடுத்தும் பணியாளர்களுக்கான வழிகாட்டல் கைநூல்.

**அழைப்பிதழ்**

திருமண பதிவின் போது மணமக்களுக்கு விடுக்கப்படும் அழைப்பொன்றே இது. புது மணத்தம்பதிகளுக்கான ஒரு சேவையைப் பெற்றுக் கொள்ளுமாறு இதன் மூலம் அவர்கள் அழைக்கப்படுகின்றனர். திருமணத்தை பதிவு செய்யும் போது திருமணப் பதிவாளர் புதிய தம்பதிகளுக்கு ஒரு அழைப்பிதழை வழங்குவார். பிரதேசத்தின் சுகாதார வைத்திய அதிகாரி அவ்வப்போது பிரதேசத்தின் திருமணப்பதிவாளருக்கு விழிப்புணர்வை எற்படுத்தி இம்முறைமை செவ்வனே நடைபெறுவதை உறுதி செய்து வர வேண்டும். பிரதேசத்தில் உள்ள சகல திருமண பதிவு அலுவலகங்களிலும் இவ்வழைப்பிதழ் போதுமான அளவு கையிருப்பில் இருப்பதை சுகாதார வைத்திய அதிகாரி ஊர்ஜிதம் செய்து வர வேண்டும்.

இச்சேவையை பிரபல்யப்படுத்தும் ஒரு உபாயமாகவே இதனைப் பயன்படுத்தல் வேண்டும். தகுதிவாய்ந்த தம்பதிகளின் பதிவேட்டில் பதிவு செய்வதற்கான புதிய தம்பதிகளை பொது சுகாதார மருத்தவமாது இனங்காண வேண்டுமே தவிர திருமணப் பதிவாளர்கள் மீது அது சார்ந்திருக்கக் கூடாது.

**கருவுருவதற்கு முன்பே அவதானிக்கும் கருவி**

இது தம்பதிகள், பொது சுகாதார மருத்துவ மாது மற்றும் மருத்துவ அதிகாரி ஆகியோர் பூர்த்தி செய்ய வேண்டிய வினாத்தாளும் சரிபார்த்தல் பட்டியலுமாகும். திருமணம் ஒன்றை தகுதியான தம்பதிகள் ஏட்டில் பொது சுகாதார மருத்துவ மாது பதிவு செய்து திட்டம் பற்றி விளக்கியதன் பின் இது தம்பதிகளுக்கு வழங்கப்பட வேண்டும். கருத்தரிப்பதற்கு முன்பு அவதானிக்கும் திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு முன் தம்பதிகள் அவர்களிடையே தரப்பட்ட வினாத்தாளை பூர்த்தி செய்வது பற்றி கலந்தாலோசித்தல் அவசியம். அது பூர்த்தி செய்யப்பட்டவுடன், தம்பதிகளில் உள்ள ஆபத்து காரணிகளை (Risk factor) இனங்காண பொது சுகாதார பணியாளர் குழு அக்கருவியை பயன்படுத்துவர். ஸ்கீரினிங் கருவிகள் எந்நேரமும் போதுமான அளவு இருப்பதை பொது சுகாதார மருத்துவ மாது உறுதிப்படுத்தல் வேண்டும்.

**BMI கணிப்பான்**

குறிப்பிட்ட உயரம் மற்றும் நிறைக்கான பெறுமானங்களை BMI கணிப்பான் தரும். அத்துடன் குறிப்பிட்ட BMI பெறுமானத்திற்கான நிறத்தையும் அது தரும். மருத்துவ நிலைய அமர்வுகளில் BMI ஐ கணிப்பதற்கு இது பயன்படுத்தப்படும்.

**அன்பின் கூட்டிற்கு இனிய வாழ்த்துக்கள்**

**இது தம்பதிகளுக்கான தகவல் கையேடு ஆவதோடு, இரண்டாவது சுகாதார கல்வி அமர்வின் முடிவின் போது இக்கைநூல் தம்பதிகளுக்கு வழங்கப்பட வேண்டும்.**

இக்கைநூலை வாசித்து முடித்ததன் பின் திருப்பித் தரும் நிபந்தனையுடனேயே அது வழங்கப்படுவதுடன் தம்பதிகளிடமிருந்து அவற்றை மீளப்பெறுவதற்கான ஒரு பொறிமுறை இருத்தல் வேண்டும். ஒவ்வொரு பொது சுகாதார மருத்துவ மாதிற்குரிய பிரதேசமும் குறைந்தது 5 கையேடுகள் இருப்பதை சுகாதார மருத்துவ அதிகாரி உறுதி செய்து கொள்ள வேண்டும். அதே சமயம், குறிபிட்ட மாவட்டத்திற்குத் தேவையான எண்ணிக்கை கைநூல்கள் இருப்பதை தாய், சேய் நல சுகாதார மருத்துவ அதிகாரி உறுதி செய்து வர வேண்டும். கைநூல்கள் போதாவிட்டால் குடும்ப சுகாதார பணியகத்திற்கு விண்ணப்பிப்பதன் மூலம் அவற்றை பெற்றுக் கொள்ளலாம்.

**புதிதாக மணமுடித்தவர்களுக்கு சேவை வழங்கும் விதத்தை தெளிவுபடுத்தும் பணியாளர்களுக்கான வழிகாட்டல் கைநூல்**

கலந்தாலோசிக்கப்பட்ட தலைப்புகள் தொடர்பான சேவை வழங்குனர்களின் அறிவை மேம்படுத்துவதற்குத் தேவையான தகவல்களை இக்கைநூல்கள் தரும். 'புதிதாக மணம் முடித்தவர்களுக்கான சேவை பக்கேஜ்' திட்டம் ஊடாக கற்பம் தரிப்பதற்கு முன்பான சேவைகளை வழங்கும் அனைத்து பணியாளர்களுக்கும் இக்கைநூல்கள் விநியோகிக்கப்படல் வேண்டும்.

## சேவை பக்கேஜிற்கான செயன்முறை

**சேவை வழங்கலுக்காக வாடிக்கையாளரை இனங்காணல்:**

புது மணத்தம்பதிகளுக்கான இச்சேவைக்கான அழைப்பை திருமணப் பதிவாளர்கள் ஊடாக விடுக்க வேண்டும். இச்சேவையை பெற தகுதிவாயந்த தம்பதிகளை மக்கள் சுகாதார பணியாளர்கள் (அதாவது பொது சுகாதார

மருத்துவ மாதுக்கள் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள்கள்) தங்களது கள விஜயங்களின் போது இனங்கண்டு அவர்களை பதிவிற்காக பொது சுகாதார மருத்துவ மாதிடம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**களத்தில்/ பொது சுகாதார மருத்துவமாது அலுவலகத்தில் சேவை தொடர்பாக உள்ள வசதிகள்:**

புதிய தம்பதிகளை அடையாளங்கண்டு‘தகுதியுள்ள குடும்பங்கள் பதிவேட்டில்’ [H526] பதிவு செய்ய வேண்டும்.
பதிவு செய்ததன் பின், தம்பதிகளுக்கு ‘புதிதாக மணம் முடித்தவர்களுக்கான சேவை பக்கேஜ்’ பற்றி சுகாதார வைத்திய அதிாிகள் குழு தெளிவுரை வழங்க வேண்டும்.

அதன் பின், கருவுறுவதற்கு முன்பே அவதானிக்கும் கருவியை தம்பதிகளுக்கு கொடுத்து தம்பதிகள் அவர்களுக்கிடையே ஆலோசனை செய்ததன் பின் அதை பூர்த்தி செய்ய வேண்டுமெனவும், அதை பூர்த்தி செய்ததன் பின் பொது சுகாதார மருத்துவ மாதிடம் கையளிக்க வேண்டும் எனவும் அவர்களிடம் கூற வேண்டும். அத்துடன் தம்பதிகள் வழங்கியுள்ள தகவல்களின் இரகசியத்தன்மை கட்டாயம் பாதுகாக்கப்படும் என அவர்களுக்கு உறுதியளித்தலும் அவசியம்.

பிரச்சினைகள் ஆபத்து காரணிகளை அல்லது நிலைகளை இனங்காண்பதற்கு பூர்த்தி செய்யப்பட்ட கருவுறுவதற்கு முன்பே அவதானிக்கும் கருவிகளை கவனமாக பொது சுகாதார மருத்துவ மாது மதிப்பீடு செய்தல் வேண்டும்.

- குறிப்பிட்ட கடந்த கால மற்றும் தற்போதைய உடல் நிலைகள், பயன்படுத்தும் மருந்து வகைகள் மற்றும் ஆபத்து காரணிகள்.
- உடல் நிலைகள் தொடர்பான குடும்ப நோய் சரிதை.
- உடலுறவு ரீதியான மற்றும் பிள்ளைப்பேறு தொடர்பான ஆபத்து காரணிகள்
- குடும்ப போஷாக்கு.
- வாழ்வு முறை தொடர்பான ஆபத்து காரணிகள்.
- சூழல் தொடர்பான ஆபத்து காரணிகள்.
- சமூக-உளவியல் அம்சங்கள் (மன அழுத்தம், வன்முறை)
- ருபெல்லா தடுப்பு மருந்து/ ∴போலிக் அமிலம் கொடுக்கப்பட்டுள்ளதா?

தேவை எனில் அவர் தகவல்களை தம்பதிகளுடன் சரி பார்த்தல் வேண்டும்.

இனங்காணப்பட்ட ஆபத்து காரணிகளை, கருவுறுவதற்கு முன்பே அவதானிக்கும் கருவியில் பொருத்தமான கட்டத்தில் பொது சுகாதார மருத்துவ மாது குறிப்பிட வேண்டும்.
சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பணியாளர் குழுவினர் தயாரித்த நிரல் அட்டவணை அடிப்படையில், 1ம மற்றும் 2ம அமர்வுகளுக்கான நேரம் மற்றும்

திகதிகளை புதிதாக மணமுடித்த தம்பதிகளின் நேர வசதியை கருத்தில் கொண்டும், அதிக நாட்கள் பிற்படுத்தாமலும் பொது சுகாதார மருத்துவ மாது அறிவிக்க வேண்டும்.

இதன் போது, இரு அமர்வுகளிலும் தம்பதிகள் இருவரும் சேர்ந்தே பங்குபற்றுவதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுதல் வேண்டும்.

**தம்பதிகள் இருவரும் இரு அமர்வுகளிலும் சேர்ந்தே பங்குபற்றுவது மிக முக்கியமாகும்**

## புதிதாக மணமுடித்தவர்களுக்கான அமர்வுகள்

சேவை பக்கேஜ் இரு அமர்வுகளாக வழங்கப்படுதல் வேண்டும். குறைந்த பட்சம் ஒரு நிரல் ஒரு மாத காலத்திற்கு நடத்தப்படுதல் வேண்டும். அதற்கு அடுத்த மாதங்களில் இரு நிரல்கள் நடாத்தப்படலாம்.

(உதா: 1 வது நிரல் - தை
2 வது நிரல் - மாசி
1 வது நிரல் - பங்குனி
2 வது நிரல் - சித்திரை

...இவ்வாறு தொடர வேண்டும்

கணவன் மனைவி இருவரும் சேர்ந்தே இரு அமர்வுகளிலும் பங்கேற்க வேண்டும். இருவரில் ஒருவர் ஒரு அமர்வை தவற விட்டு விட்டால், தவற விட்டவர் அடுத்த மாதத்தில் மீண்டும் அவ்வமர்வு நடைபெறும்போது அதில் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என வலியுறுத்த வேண்டும்.
அதே போல, ஒரு தம்பதி குறிப்பிட்ட ஒரு அமர்வை தவற விட்டால், அடுத்த மாதத்தில் மீண்டும் அவ்வமர்வு நடைபெறும் போது அதில் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என அவர்களை வலியுறுத்த வேண்டும்.
(உதாரணமாக, ஜனவரி மாதத்தில் நடைபெறும் 1 வது அமர்வை தவற விட்டால் அது மீண்டும் மார்ச் மாதத்தில் நடைபெறும் போது அவர்கள் கட்டாயம் அதில் பங்கேற்க வேண்டும்)

இந்த வருடத்தில் புதிதாக மணமுடித்த தம்பதிகளுக்காக நடைபெறும் அமர்வுகளின் திகதிகள் மற்றும் நடைபெறும் இடம் ஆகியவற்றை குறிப்பிடப்பட்ட கால அட்டவணை ஒன்று ஒவ்வொரு MOH அலுவலகத்திலும் பிணியாய்வு நிலையங்களிலும் இருப்பதனை காட்சிப்படுத்தவும் வேண்டும். மேலும் பணியாளர்கள் அனைவரும் இந்த கால அட்டவணை பற்றி அறிந்திருத்தல் வேண்டும்.

இவ்வமர்வின் போது வழங்கப்படும் சேவைக்கு கீழ் காண்பவைகள் உட்படும்:

- மகிழ்ச்சியான திருமண வாழ்வு மற்றும் சுகாதார மேம்பாட்டை எவ்வாறு பேணுவது என்பது பற்றிய விழிப்புணர்வு.
- தம்பதிகள் இருவருடைய சுகாதாரத்தை அவதானித்தல்.
- எதிர்கால கருவுறுதல்லுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய ஆபத்து நேர்வுகளை குறைப்பதற்கு இனங்காணப்பட்ட பிரச்சினைகளை திறம்பட நிர்வகித்தல்.
- தேவைப்படின் குடும்பத் திட்டமிடல் சேவைகளை வழங்கவும்.
- சுகாதாரக் கல்வி வழங்கல்:

✓ சேவை வழங்குநர் கையேட்டில் தரப்பட்டுள்ள எட்டு முக்கிய தலைப்புக்களில் சுகாதாரக் கல்வி வழங்கப்படல் வேண்டும்.

✓ முதலாவது அமர்வில் கீழ் காணும் தலைப்புக்களில் சுகாதாரக் கல்வி வழங்கப்படல் வேண்டும்.

- கருவுறுவதற்கு முன்பான கவனிப்பு பக்கேஜ்
- உடல் இன்பம் மற்றும் தாம்பத்திய உறவு
- உடலுறவு மூலம் பரவும் நோய்கள் மற்றும் பொறுப்பான உடலுறவு நடத்தைகள்
- சிறந்த விதத்தில் குடும்பத்தை அமைத்துக்கொள்ள குடம்பத்தை திட்டமிடல்

✓ இரண்டாவது அமர்வில் கீழ் காணும் தலைப்பக்களில் சுகாதாரக் கல்வி வழங்கப்படல் வேண்டும்.

- சிறந்த போஷனை மற்றும் சுகாதார பழக்கங்கள்
- சிறந்த இல்லற உறவு மற்றும் குடும்ப நலம் பேணல்
- வன்முறை இல்லாததால் ஏற்படும் நற்பயன்கள்
- ஆண் பங்களிப்பு மற்றும் தாய் தந்தை பொறுப்பு

✓ சேவை வழங்குபவர்களும பங்கேற்பவர்களும தாமபத்திய உறவு போன்ற விடயங்கள் பற்றிப் பேசத்தயங்குவர் என்றபடியால் வழங்கப்படும் தகவல்களின் செல்லுபடித்தன்மையை மேம்படுத்த இது போன்ற விடயங்கள் பற்றி சுகாதார வைத்திய அதிகாரி பேச வேண்டும். இது போன்ற விடயங்கள் பற்றி ஒரு மருத்துவ அதிகாரி பேசும் போது அது பற்றி கேள்விகளை கேட்பதற்கு பங்கேற்பவர்களும் ஊக்கம் பெறுவர்.

✓ ஏனைய தலைப்புக்களின் கீழ் சுகாதார வைத்திய அதிகாரி அல்லது நியமிக்கும் அதிகாரி ஒருவர் உரை நிகழ்த்தலாம். இவ்வதிகாரிகளை, அவர்களுடைய ஆற்றல் அடிப்படையில் தெரிவு செய்தல் வேண்டும்.

✓ **பவர் பொயிண்ட் வழங்கல்கள், ஃபிளிப் சார்ட்** போன்ற சுகாதாரக் கல்வி முறைகளை பிரதேசத்திலேயே உருவாக்கிக் கொள்ளலாம்.

✓ சுகாதாரப் பணியாளர்களுக்கான வழிகாட்டி நூலானது, சுகாதாரக் கல்வி அமர்வுகளின் போது உரை நிகழ்த்த வேண்டிய தலைப்புக்கள் தொடர்பான அறிவையும் தகவல்களையும் தருகின்றது. இந்த வழிகாட்டி நூலில் உள்ள அனைத்து அத்தியாயங்களையும், சுகாதாரக் கல்வி அமர்வுகளுக்கு பங்களிப்பு செய்யும் களப் பணியாளர்கள் படிக்க வேண்டும்.

BMI கணிப்பு, மருத்துவ நிலைய பரிசோதனைகள் மற்றும் விசாரணைகள், குடும்பத்திட்ட சேவைகள் போன்ற ஏனைய சேவைகளை, பணியாளர்கள் மற்றும் பங்கேற்பவர்களின் வசதிக்கேற்ப வேறு அமர்வுகளில் மேற்கொள்ளலாம்.
பொதுவாக இரண்டாவது அமர்விற்கு வருபவர்களின் எண்ணிக்கை குறைவடையலாம் என்றபடியால், முன்பு நடைபெற்ற அமர்வைப் போன்றே அதிலும் அதிகமானோரா பங்கேற்கச் செய்வதற்காக அதை அதிக ஈாப்புள்ளதாக ஆக்குவதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் நல்லது. (உதா: இரண்டாவது அமர்வில் அதிகமானோரை பங்கேற்கச் செய்வதற்காக அதில் இரத்த பரிசோதனை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கலாம். அது தவிர, இரண்டாவது அமர்வில் பங்கேற்பதன் முக்கியத்துவத்தை முதலாவது நிரலின் போது வலியுறுத்தல் வேண்டும்)

**புதிதாக மணமுடித்தவர்களுக்கு சேவை வழங்குவதற்காக இரு அமர்வுகளை நடாத்துவது கட்டாயமாகும்.**

**புதிதாக மணமுடித்த தம்பதிகளுக்கான ஏனைய சேவைகளுக்கான வசதிகள்**

தம்பதிகளை பதிவு செய்து சுகாதார வைத்திய அதிகாரி இடத்தினை தம்பதிகள் பூர்த்தி செய்து பொது சுகாதார மருத்துவமாது அங்கீகரித்த, கருவுறுவதற்கு முன்பான கருவியுடன் அனுப்ப வேண்டும்.

சுகாதார வைத்திய அதிகாரியிடம் அனுப்புவதற்கு முன் கீழ் காண்பவற்றை மேற்கொள்ள வேண்டும்:

- BMI கணிப்பானை பயன்படுத்தி எடை மற்றும் உயரம் ஆகிய விபரங்களை பெற வேண்டும்.
- தம்பதி இருவரினதும் குருதியின் குளுக்கோஸ் மட்டம், ஈமோகுளோபின் மட்டம் ஆகிய விபரங்களை பெறுதல் வேண்டும். வசதி இருப்பின் இரத்தப் பிரிவு, Rh, VDRL போன்ற ஏனைய ஆய்வுகளையும் மேற்கொள்ளலாம்.

கருவுறுவதற்கு முன்பே அவதானிக்கும் கருவியில் தம்பதி மற்றும் பொது சுகாதார மருத்துவ மாது தந்துள்ள தகவல்களை சுகாதார வைத்திய அதிகாரி பரிசீலிக்க

வேண்டும். தரப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் தெளிவுகளை சுகாதார வைத்திய அதிகாரி வழங்க வேண்டும். தேவையெனில் மேலதிக தகவல்களைப் பெற வேண்டும்.

CVS, RS, CNS மற்றும் வயிற்றுப் பரிசோதனை, இரத்த அழுத்த பரிசோதனை உட்பட அடிப்படை மருத்துவப் பரிசோதனை ஒன்றை தம்பதிகள் இருவருக்கும் மேற்கொள்ள வேண்டியதுடன், மார்பு பரிசோதனை ஒன்றை பெண்களுக்கு சுகாதார வைத்திய அதிகாரி மேற்கொள்ள வேண்டும். தம்பதிகள் தொடர்பான ஆபத்துக் காரணிகள் மற்றும் ஏனைய சுகாதாரப் பிரச்சினைகளை மருத்துவச் சரிதை, மற்றும் பரிசோதனைகள் மூலம் இனங்காண வேண்டும்
இனங்காணப்பட்ட அபாய நேர்வு சாத்தியங்கள் மற்றும் பிரச்சினைகள் பொருத்தமான விதத்தில் நிர்வகிக்கப்படுதல் வேண்டும். சுகாதார வைத்திய அதிகாரி மட்ட அறிவுரைகளை பெற வேண்டும் அல்லது அதை விட உயர் மட்டத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லலாம். தேவைப்பட்டால் குடுமபத் திட்டமிடல் அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம்.
மருத்துவ நிலையத்தில் தம்பதிகளை பதிவு செய்து 'கருவுறுவதற்கு முன்பே அவதானிக்கும் கருவியுடன்' MOH இடம் அனுப்பி வைக்க வேண்டும்.

- ருபெல்லா தடுப்பு மருந்து பெறாத பெண்களுக்கு அதை வழங்குதல்
- சுகாதாரக் கல்விச் சேவை:

**அமர்வின் முடிவில்...**

'கருவுறுவதற்கு முன்பே அவதானிக்கும் கருவியை' தம்பதிகளுக்கு திருப்பித் தர வேண்டும். மகப்பேற்றிற்கு முன்னதாக தம்பதிகள் முதல் தடவையாக மருத்துவ நிலையத்திற்கு வரும்போது கருவுறுவதற்கு முன்பே அவதானிக்கும் கருவி மீண்டும் மீளாய்வு செய்யப்படவிருப்பதால், அதை கவனமாக வைத்திருக்கும்படி அவர்களுக்கு கூற வேண்டும். அத்துடன் சிகிச்சைக்காக எங்கு சென்றாலும் கருவுறுவதற்கு முன்பே அவதானிக்கும் கருவியை அவர்களுடன் மறக்காமல் எடுத்து செல்லும்படியும் அவர்களுக்குக் கூற வேண்டும்.

தம்பதியினரை மீளாய்வு செய்வது அவசியம் எனக்காணப்பட்டால், அது பற்றி அவர்களுக்குத் தெரிவித்து தொடர் அவதானிப்பிற்கான திகதி ஒன்றை தெரிவித்தல் வேண்டும்.
தம்பதியின் உடல் நலம் தொடர்பான முக்கிய தகவல்கள் ஏதும் இருப்பின் தொடர்புடைய பொது சுகாதார மருத்து மாதிற்கு சுகாதார வைத்திய அதிகாரி

அறியத்தந்து தொடர் அவதானிப்பொன்றை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் பற்றி சுகாதார வைத்திய அதிகாரி வலியுறுத்த வேண்டும்.

இரண்டாவது அமர்வின் முடிவில் தம்பதிகளுக்கு வீட்டிற்குச் சென்று படிப்பதற்காக 'மகிழ்ச்சியின் இல்லத்திற்கு எமது நல்வாழ்த்துக்கள்' என்ற கைநூல் வழங்கப்பட வேண்டும்.

| |
|---|
| **மருத்துவ சிகிச்சைக்காக செல்லும்போது 'கருவுறுவதற்கு முன்பே அவதானிக்கும் கருவியை' தவறாமல் எடுத்து செல்லுமாறு தம்பதிகளுக்கு கூற வேண்டும்** |

**ஒவ்வொரு வகையையும் சேர்ந்த பணியாளர்களின் கடமைகள்**

**பொது சுகாதார மருத்துவமாதின் (PHM) கடமைகள்**

**களத்தில்**

- பிரதேசத்தில் உள்ள அனைத்து புதுமணத் தம்பதிகளையும் அடையாளங்கண்டு அவர்களை 'தகுதிவாய்ந்த தம்பதிகள் பதிவேட்டில்' பதிவு செய்தல்.
- 'புதிதாக மணம் முடித்தவர்களுக்கான சேவை பக்கேஜ்' பற்றி தம்பதிகளுக்கு தெளிவு படுத்தல்.
- 'கருவுறுவதற்கு முன்பே அவதானிக்கும் கருவியை' தம்பதிகளுக்கு வழங்கி பூர்த்தி செய்யும் விதம் தொடர்பான அறிவுரைகளை வழங்கல்.
- பூர்த்தி செய்யப்பட்ட 'கருவுறுவதற்கு முன்பே அவதானிக்கும் கருவியை' பரிசீலித்து தம்பதிகள் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் அபாய காரணிகளை இனங்காணல் மற்றும் தேவையெனில் விளக்கங்களை வழங்கல்.
- சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் / சிகிச்சை நிலையத்தில் நடைபெறும் முதலாம் மற்றும் இரண்டாம் அமர்வுகளில் தம்பதிகள் பங்கேற்பதற்கான திகதி மற்றும் நேரத்தை அவர்களுக்குத் தெரிவித்தல்.
- தொடர்ச்சியான கவனிப்புத் தேவைப்படும் தம்பதிகளுக்கு தொடர் கண்காணிப்பு வழங்கல் வேண்டும்.
- தம்பதிகளுடன் நட்புறவை மேற்கொண்டபடி பெறக் கூடிய சேவைகள் பற்றி அவர்களுக்கு விளக்கி அவற்றை பெறும் விதத்தையும் தெளிவு படுத்தவும்.
- 'புதிதாக மணம் முடித்தவர்களுக்கான சேவை பக்கேஜ' பற்றியும் அவை பெறும் விதத்தையும் சமூகத்திற்கு அறிவுருத்தல வேண்டும்.
- தம்பதிகள் தரும் தகவல்களின் இரகசியத்தன்மையை பேண வேண்டும்
- போதுமான கருவிகள் கையிருப்பில் உள்ளதனை உறுதி செய்தல் வேண்டும்.

**புதிதாக மணமுடிக்கும் தம்பதிகளுக்கான அமர்வில்**

- சிகிச்சை நிலையத்தில் தம்பதிகளை பதிவு செய்தல்.
- **கணவன் மனைவி இருவருடைய** உயரத்தையும் அளந்து, பாரத்தை நிறுத்து BMI கணிப்பானைப் பயன்படுத்தி பெறுமானங்களை கணித்தல்.
- BMI பெறுமானங்களின் அடிப்படையில் தேவையான அறிவுரைகளை வழங்கல்.
- ருபெல்லா தடுப்பு மருந்து பெறாத பெண்களுக்கு MMR தடுப்பு மருந்து வழங்குதல்.
- குருதியில் குளுக்கோஸ் மற்றும் ஹீமோகுளோபின் மட்டங்களை ஸ்ட்ரிப்களை பயன்படுத்தி மதிப்பீடு செய்தல்.

- சுகாதார வைத்திய அதிகாரியின் கண்காணிப்பின் கீழ் சுகாதாரக் கல்வியை வழங்குதல். இதன் குறிக்கோள், அமர்வின் தலைப்புக்களின் முக்கியத்துவத்தை புதிதாக மணமுடித்தவர்களுக்கு உணர்த்துவதும், மகிழ்ச்சிகரமான மற்றும் வெற்றிகரமான மணவாழ்விற்குத் தேவையான நடத்தை மாற்றங்களை தம்மிடம் ஏற்படுத்திக் கொள்வதற்கான ஆர்வத்தை அவர்களில் ஊக்குவிப்பதுமாகும்.
- சுகாதார வைத்திய அதிகாரியின் இன் பரிந்துரையின் அடிப்படையில் குடும்பத் திட்டமிடல் அறிவுரைகளை வழங்க வேண்டும்
- தம்பதிகளை மரியாதையுடன் நடத்த வேண்டியதுடன் இரகசியத்தன்மையையும் பாதுகாக்க வேண்டும்.

**<u>பொது சுகாதார பரிசோதகரின் (PHI) கடமைகள்</u>**

- பிரதேசத்தில் உள்ள புதுமணத் தம்பதிகளை அடையாளம் காண்பதற்கும் 'புதிதாக மணம் முடித்தவர்களுக்கான சேவை பக்கேஜ்' பற்றி தெளிவு படுத்துவதற்கும் பொது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் / சிகிச்சை நிலையத்தில் நடைபெறும் இரண்டு அமர்வுகளில் பங்கேற்க தம்பதியினரை ஊக்குவிப்பதற்காதகவும் பொது சுகாதார மருத்துவ மாதுடன் ஒன்றிணைந்து பொது சுகாதார பரிசோதகர் செயற்பட வேண்டும்.

சிகிச்சை நிலையத்தில் கீழ் காணும் கருமங்கள் மேற்கொள்ளப்படும்:

- அமர்வுகளை ஏற்பாடு செய்வதற்காக பொது சுகாதார பணியாளர்களுக்கு (MOH, PHNS, PHM) ஒத்துழைப்பு வழங்குதல்.
- அமர்வுகளின் போது தம்பதிகள் மத்தியில் சுகாதாரக் கல்வியை வழங்கி ஆரோக்கியம் தொடர்பான அவர்களுடைய அறிவை மேம்படுத்தல்.
- 'புதிதாக மணம் முடித்தவர்களுக்கான சேவை பக்கேஜ்' பற்றியும் அதனைப் பெறும் விதம் பற்றியும் சமூகத்திற்கு அறிவுருத்தல வேண்டும்.

**<u>பொது சுகாதார தாதி சகோதரியின் (PHNS) கடமைகள்</u>**

புதிதாக மணமுடித்தவர்களுக்காக அமர்வுகளை ஒழுங்கு செய்வதற்கான உதவிகளை பொது சுகாதார பணியாளர்களுக்கு (MOH, PHMM, PHII) பொது சுகாதார தாதி சகோதரிக்கு வழங்க வேண்டும். அவை தவிர கீழ் காணும் விடயங்களையும் பொது சுகாதார தாதி சகோதரி மேற்கொள்ள வேண்டும்:

- சிகிச்சை நிலையத்தை திறமையாக நிர்வகித்து வருவதற்கான வழிகாட்டல்களை வழங்கள்.
- குருதியில் குளுக்கோஸ் மற்றும் ஈமோகுளோபின் மட்டங்களின் பரிசோதனைகள் போன்ற அடிப்படை பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் போது கண்காணித்தல்.
- இரத்த வகைப்படுத்தல் மற்றும் Rh, VDRL போன்ற பரிசோதனைகளுக்காக இரத்த மாதிரிகளை எடுத்தல்.
- அமர்வின் செயற்பாடுகளை கண்காணித்தல்.
- கருவுறுவதற்கு முன்பே அவதானிக்கும் கருவி, கைநூல்கள், அழைப்பிதழ்கள், BMI கணிப்பான்கள் மற்றும் தேவையான பொருட்கள் தொடர்ச்சியாக தரப்படுவதை உறுதி செய்து வருதல்.
- 'புதிதாக மணம் முடித்தவர்களுக்கான சேவை பக்கேஜ்' தொடர்பான புதிய கோட்பாடுகள், சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்கள் பற்றி பயிற்சி நிகழச்சிகளில்/ மாதாந்த கூட்டங்களில் பணியாளர் குழுவினரை அறிவுறுத்தல்.

- அமர்வின் போது புதிதாக மணமுடித்த தம்பதிகளுக்கு தெளிவுரை வழங்குதல்.

**<u>சுகாதார மருத்துவ அதிகாரியின் கடமைகள்</u>**

புதிதாக மணமுடித்த தம்பதிகளுக்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் / சிகிச்சை நிலையத்தில் அமர்வுகளை நடத்துவது சுகாதார வைத்திய அதிகாரியின் பொறுப்பாவதோடு அதன் போது ஏற்படும் கீழ் காணும் விடயங்களும் அவருடைய கடமைகளில் உள்ளதாகும்:

- 'கருவுறுவதற்கு முன்பே அவதானிக்கும் கருவியை' கவனமாக வாசித்துப் பார்த்து புதிதாக மணமுடித்த தம்பதிகளுக்கு உள்ள பிரச்சினைகள் மற்றும் ஆபத்து காரணிகளை அடையாளம் காணுதல்.
- கண்டறிந்த பிரச்சினைகளுக்கான தீர்வுகளை வழங்குதல்.
- அமர்வில் பங்கேற்கும் புதிதாக மணமுடித்த அனைத்து தம்பதிகளையும் (கணவன் மனைவி இருவரையும்) மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்துதல்.
- இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்கான சிகிச்சைகளை/ அறிவுரைகளை / ஆலோசனைகளை வழங்குதல்.
- தேவையெனில் மருத்துவ நிபுணர்களை சிபாரிசு செய்தல்.
- பாலுணர்வு மற்றும் உடலுறவு, பொறுப்புமிக்க பாலுறவு நடத்தை மற்றும் உடலுறவு மூலம் தொற்றும் நோய்கள் ஆகிய முக்கிய விடயங்கள் தொடர்பரன விளக்கங்களை முதலாவது அமர்வின் போது வழங்குதல்.
- கருவுறுவதற்கு முன்பே அவதானிக்கும் கருவி, கைநூல்கள், அழைப்பிதழ்கள், BMI கணிப்பான்கள் மற்றும் தேவையான பொருட்கள் தொடர்ச்சியாக தரப்படுவதை உறுதி செய்து வருதல்.
- 'புதிதாக மணம் முடித்தவர்களுக்கான சேவை பக்கேஜ்' தொடர்பான புதிய கோட்பாடுகள், சுற்றறிக்கைகள் மற்றும் வழி காட்டல்கள் பற்றி உள்ளக பயிற்சி நிகழச்சிகள் / மாதாந்த கூட்டங்களில் பணியாளர் குழுவினரை அறிவுறுத்தல்.
- பிரச்சினைகள் இனங்காணப்பட்ட தம்பதிகள் விடயத்தில் தொடர் கண்காணிப்புக்களை மேற்கொள்ளல்.
- அமர்வுகளை நடாத்துதல், அவை தொடர்பான ஒட்டுமொத்த கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைத்தலை மேற்கொள்ளல்.

**கருவுறுவதற்கு முன்பான சேவை பக்கேஜ் தொடர்பில் RHMIS**

அச்சிடப்பட்ட'புதிதாக மணம் முடித்தவர்களுக்கான சேவை பக்கேஜ்' வருகைப் பதிவேடொன்று 2018 ம் ஆண்டில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அமர்வுகளின் போது தம்பதிகள் தொடர்பான தரவுகளை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பணியாளர் குழு அப்பதிவேட்டில் எழுத வேண்டும். பிறகு அத்தரவுகளின் சுருக்கத்தை காலாண்டு தாய், சேய் சுகாதார சிகிச்சை நிலைய பதிவேட்டில் (RH MIS 527) எழுத வேண்டும். RH MIS 527 இல் 2018 முதல் பொருத்தமான கட்டங்கள் உட்படுத்தப்படும்.

**1. இப்பக்கேஜ் மூலம் சேவைகளை பெற்ற புதிதாக மணமுடித்த தம்பதிகளின் வீதாசாரத்தை கணக்கிடு விதம்:**

RH-MIS 527 இல் குறிப்பிடப்பட்டுள்ள, இவ்வமர்வில் பங்கேற்ற தம்பதிகளில் பாதிப்பேரின் எண்ணிக்கையினை குறிப்பிட்ட வருடத்தில் பொது சுகாதார மருத்துவ மாதின் மூலம் பதிவு செய்யப்பட்ட புதிதாக மணமுடித்த தம்பதிகளின் எண்ணிக்கையால் வகுத்தல் வேண்டும். (RH MIS 509) x 100% (மணமுடித்த தம்பதிகளினை இரண்டாக வகுக்க வேண்டும். ஏனெனில் தம்பதிகள் 2 அமர்வுகளில் பங்குபற்ற வேண்டும்)

குறிப்பிட்ட வருடத்தில் அமர்வில் பங்கேற்ற புதிதாக மணமுடித்த தம்பதிகளின் எண்ணிக்கை/ 2

$$\frac{\text{குறிப்பிட்ட வருடத்தில் அமர்வில் பங்கேற்ற புதிதாக மணமுடித்த தம்பதிகளின் எண்ணிக்கை/ 2}}{\text{குறிப்பிட்ட வருடத்தில் PHMM மூலம் பதிவு செய்யப்பட்ட தமபதிகளின் எண்ணிக்கை}} \times 100$$

2. பொதுவாக இலங்கையில் திருமணங்களின் வீதம் குடித்தொகையில் 1 % ஆகும். ஆகவே இச்சேவையினை பெற்றுக்கொள்ள வேண்டிய தம்பதிகளின் எண்ணிக்கை அண்ணளவில் குடித்தொகையில் 1 % ஆகும்

டாக்டர் அனில் ஜாசிங்ஹ
சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம்

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health, Nutrition & Indigenous Medicine,
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.